COLREV/5722/2022-A5

மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
திருப்பத்தூர்.
நாள்:09-10-2022

## அவசர சுற்றறிக்கை

-

பொருள் : கிராம நிருவாகம் – தமிழ்நாடு கிராம உதவியாளர் பணி விதிகள் – 1995 – காலி பணியிடங்கள் நிரப்புவது – கூடுதல் தலைமைச் செயலாளர் / வருவாய் நிருவாக ஆணையர் அவர்களின் அறிவுரைகள் – தொடர்பாக.

பார்வை :

1. அரசாணை (நிலை) எண்.625, வருவாய்த்துறை நாள்.06.07.1995.
2. அரசாணை (நிலை) எண்.521, வருவாயத்துறை நாள்.17.06.1998.
3. அரசாணை (நிலை) எண்.787, வருவாயத்துறை நாள்.06.12.2006.
4. அரசாணை (நிலை) எண்.155 வருவாயத்துறை நாள்.26.03.2010.
5. அரசாணை (நிலை) எண்.375 வருவாயத்துறை நாள்.19.10.2015.
6. அரசாணை (நிலை) எண்.574, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை, நாள்.17.10.2020.
7. அரசாணை (நிலை) எண்.91 மனிதவள மேலாண்மைத்(எஸ்)துறை நாள்.13.09.2021.
8. கூடுதல் தலைமை செயலர்/வருவாய் நிருவாக ஆணையர் அவர்களின் கடித எண்.வ.நி.2(2)/35730/2020, நாள்.26.10.2021.
9. தமிழ்நாடு கிராம உதவியாளர் பணி விதிகள் 1995
10. கூடுதல் தலைமை செயலர்/வருவாய் நிருவாக ஆணையர் அவர்களின் கடித எண்.வ.நி.2(2)/01-04/468/2022, நாள்.28.09.2022.
11. இட ஒதுக்கீடு குறித்த வழிகாட்டுதல்கள்
12. அரசாணை (நிலை) எண்.55 மனிதவள மேலாண்மைத்(எஸ்)துறை நாள்.08.04.2010.

13. கூடுதல் தலைமை செயலர்/வருவாய் நிருவாக ஆணையர் அவர்களின் கடித எண்.வ.நி.2(2)/01–04/468/2022, நாள்.07.10.2022.

*********

பார்வை–10ல் காணும் வருவாய் நிருவாக ஆணையர் அவர்களின் கடிதத்தில் 01.10.2019 முதல் 30.09.2022 வரையிலான 3 வருட காலத்திற்குள் காலியாக உள்ள கிராம உதவியாளர் பணியிடங்களை அரசு விதிகள் மற்றும் அரசாணைகளை பின்பற்றி கீழ்கண்ட அட்டவணையில் குறிப்பிட்டுள்ளபடி கிராம உதவியாளர் ஆட்சேர்ப்பு கீழ்கண்டவாறு நடத்தப்பட வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

2) ஒவ்வொரு வட்டத்திலும் கடந்த செப்டம்பர் 30– ந் தேதி நிலவரப்படி காலியாக இருக்கும் கிராம உதவியாளர் பணியிடங்களின் எண்ணிக்கை அடிப்படையில் அனைத்து விதிகளையும் அனுசரித்து இட ஒதுக்கீடு முறைமையையும் பின்பற்றி பணி நியமனங்கள் வழங்கப்பட வேண்டும் எனத்தெரிவிக்கப்பட்டுள்ளது.

| வ.எண் | வட்டம் | 30.09.2022–ல் 3 ஆண்டுகளுக்குள் காலியாக உள்ள கிராம உதவியாளர்களின் விவரம் |
|---|---|---|
| 1 | திருப்பத்தூர் | 14 |
| 2 | நாட்றம்பள்ளி | 7 |
| 3 | வாணியம்பாடி | 3 |
| 4 | ஆம்பூர் | 7 |
| மொத்தம் | | 31 |

காலிப்பணியிடங்களின் எண்ணிக்கை பட்டியல், வட்டத்தில் உள்ள மொத்த வருவாய்க் கிராமங்களின் எண்ணிக்கைக்கு ஏற்றாற்போல் அமைந்துள்ளனவா என்பது குறித்தும், வட்டாட்சியரால் தெரிவு செய்யப்பட்டுள்ள காலியிடங்கள் அவை காலியான நாளில் இருந்து சரியான முறையில் கணக்கிட்டு இறுதி செய்யப்பட வேண்டும்.

3) இந்த காலிப்பணியிடங்களை விதிகளுக்கு உட்பட்டு உடனடியாக நிரப்ப நடவடிக்கை எடுக்க வேண்டும். அரசின் வழிகாட்டுதல்களை பின்பற்றி எந்தவித விதிமீறலும் இல்லாமல் கிராம உதவியாளர் காலியிடங்களை நிரப்ப வேண்டும்.

a. செய்தித்தாள்கள் மற்றும் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்களில் ஒரே நேரத்தில் தாலுகா அளவில் அறிவிப்பு மேற்கொள்ள வேண்டிய தேதி – 10 அக்டோபர் 2022.

b. விண்ணப்பங்கள் பெறுவதற்கான கடைசி தேதி – 7 நவம்பர் 2022
c. பூர்த்தி செய்ய வேண்டிய விண்ணப்பங்களின் ஆய்வு தேதி – 14 நவம்பர் 2022
d. படிக்கும் மற்றும் எழுதும் திறன் தேர்வு தேதி – 30  நவம்பர் 2022
e. நேர்காணல் தேதி – 15 மற்றும் 16 டிசம்பர் 2022
f. நியமிக்கப்படுவதற்கு தகுதியான நபர்களின் பட்டியலை வெளியிடுதல் மற்றும் பணி நியமன ஆணையை NIC வெப்சைட்டில் 19 டிசம்பர் 2022 அன்று வெளியிடுதல் வேண்டும்.
g. வட்டாட்சியர்கள் ஒவ்வொரு தேர்வு நிலையிலும் மாவட்ட ஆட்சித் தலைவரின் ஒப்புதலை பெற வேண்டும்.
h. விண்ணப்பிக்கும் மனுதாரர்களுக்கு எவ்வித சலுகையும் அளிக்காமல் நேர்மையான முறையில் தேர்வு நடைபெறுவதை உறுதி செய்ய வேண்டும்.
i. கிராம உதவியாளர்கள் தேர்வு முழுமையான வெளிப்படை தன்மையுடன் நடைபெற வேண்டும்.
j. தேர்வு முடிவுகளை மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில் உள்ள NIC இணையதளம் மூலமாக வெளியிடப்பட வேண்டும்.

4) ஒவ்வொரு வட்டத்திற்கும் துணைஆட்சியர் நிலையில் கீழ்க்கண்டவாறு கண்காணிப்பு அலுவலர்கள் ஏற்கனவே மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் நியமனம் செய்யப்பட்டுள்ளார்கள்.

| வ.எண் | வட்டம் | கண்காணிப்பு அலுவலர் |
|---|---|---|
| 1. | திருப்பத்தூர் | வருவாய் கோட்டாட்சியர், திருப்பத்தூர். |
| 2. | நாட்றம்பள்ளி | உதவி ஆணையர் (கலால்), திருப்பத்தூர். |
| 3. | வாணியம்பாடி | வருவாய் கோட்டாட்சியர், வாணியம்பாடி. |
| 4. | ஆம்பூர் | தனித்துணை ஆட்சியர்,<br>சமூக பாதுகாப்பு திட்டம்,<br>திருப்பத்தூர். |

5) மேலும் எழுத்து தேர்வினை நடத்தும் பொழுது கிராமங்களின் விவரம் அல்லது கிராமத்தினுடைய நில வகைப்பாடுகள் அல்லது கிராமக் கணக்குகள் போன்றவற்றிலிருந்து நூறு வார்த்தைகளுக்கு மிகாமல் கொண்ட பொதுவான பத்தியை எழுதும்படி செய்து விண்ணப்பதாரர்களின் எழுதும் திறன் வருவாய் நிர்வாக ஆணையர் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளதற்கு இணங்க உரிய விதிமுறைகளின் கீழ் கண்டறியப்பட வேண்டும். மேலும் தரமான புத்தகங்களிலிருந்து தோராயமாக எடுக்கப்பட்ட பத்தியைப் படிக்கும்படி மனுதாரர்களை கேட்பதன் மூலம் படிக்கும் திறன் சோதித்து அறியப்பட வேண்டும்.

6) **<u>அரசாணை நிலை எண் 521 வருவாய்த்துறை நாள் 17.06.1998 இன் படி கிராம உதவியாளர் பணியிடங்களை நிரப்புவதற்கு கீழ்க்கண்டவாறு தகுதிகள் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் அரசாணை (நிலை) எண்.91 மனிதவள மேலாண்மைத்(எஸ்)துறை, நாள்.13.09.2021–ல் வயது உச்ச வரம்பினை இரண்டு ஆண்டுகள் உயர்த்தி ஆணையிடப்பட்டுள்ளது.</u>**

a. பணி நியமனம் வேலைவாய்ப்பு பரிமாற்றம் மூலம் நேரடி ஆட்சேர்ப்பு மூலம் மேற்கொள்ளப்படும்.
b. பணி நியமன அலுவலர் ஆக வட்டாட்சியரை நியமித்தல்.
c. வயது வரம்பு – குறைந்தபட்ச வயது வரம்பு 21.
d. அதிகபட்ச வயது வரம்பு 32.
e. பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் பட்டியல் சாதி பட்டியல் பழங்குடியினர் அதிகபட்ச வயது வரம்பு 37.
f. கல்வித் தகுதி – ஐந்தாம் வகுப்பு தேர்ச்சி
g. மற்ற தகுதிகள் – சைக்கிள் ஓட்ட வேண்டும்
h. அடிப்படை விதிகளின் விதி 10–ன் கீழ் பரிந்துரைக்கப்பட்ட படி உள்ள பதவிக்கான உடல் தகுதி தொடர்பான சான்றிதழ் வழங்கப்படுதல் வேண்டும்.
i. ஒன்றுக்கு மேற்பட்ட வாழ்க்கைத் துணைவர்கள் அல்லது திருமணம் செய்து கொண்ட அல்லது ஒப்பந்தம் செய்து கொண்ட நபருக்கு ஏற்கனவே வாழ்க்கைத் துணை இருந்தால், அப்படிப்பட்ட மனுதாரர்கள் இப்பணிக்கு நியமனம் பெற தகுதி பெற மாட்டார்கள்.
j. பதவிக்கு நியமிக்கப்படும் நபர், அந்த கிராமத்தில் இருந்து பொருத்தமான வேட்பாளர் கிடைக்கவில்லை என்றால், நியமிக்கப்படும் கிராமத்தைச் சேர்ந்த பக்கத்து கிராமத்தைச் சேர்ந்தவர்கள் நியமனம் செய்யப்படலாம்.

7 ) **<u>அரசாணை நிலை எண் 155 வருவாய்த்துறை நாள்.26.03.2010–ன் படி கீழ்க்கண்டவாறு அறிவுரைகள் அரசால் வழங்கப்பட்டுள்ளன.</u>**

a. 01.01.2018 அன்று ஏற்பட்ட மொத்த காலிப்பணியிடங்களில் 25% பணியிடங்களை கருணை அடிப்படையில் தகுதியுள்ள நபர்களுக்கு பணி நியமனம் செய்ய ஒதுக்கீடு செய்யப்பட வேண்டும். மீதமுள்ள காலி பணியிடங்களை மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம் மூலம் நிரப்பவும் அனுமதி அளிக்கப்படுகிறது.
b. கிராம உதவியாளர் பணிக்கு வட்டாட்சியர் நியமன அதிகாரியாக இருப்பதால் சம்பந்தப்பட்ட வட்டாட்சியர், விதிகளின்படி காலி பணியிட மதிப்பீடு செய்து விதிகளின்படி நியமனம் செய்ய வேண்டும்.

c. ஒரு கிராமத்திற்கு ஒரு கிராம உதவியாளர் என்ற அரசின் கொள்கைப்படி ஒரு கிராமத்தில் ஒன்றுக்கு மேற்பட்ட கிராம உதவியாளர்கள் தற்போது பணியில் இருந்தால் அப்பணியிடங்களை ஒன்றுக்கு மேற்பட்ட நபர்கள் ஓய்வு பெறும் நாள் வரை அனுமதித்து அப்பணியிடத்தை அதன் பின்னர் நிரப்பக்கூடாது எனவும் ஒரு கிராமத்திற்கு ஒரு கிராம உதவியாளர் பணியிடத்தை மட்டுமே தொடர்ந்து வைத்திருக்க வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

8) <u>கூடுதல் தலைமைச் செயலர் / வருவாய் நிர்வாக ஆணையர் அவர்களின் கடிதம் ந.க.வ.நி2/2/35730/2020, நாள்.26.10.2021 இல் கீழ்க்கண்டவாறு அறிவுரைகள் மாவட்ட ஆட்சியர்களுக்கும் வட்டாட்சியர்களுக்கும் வழங்கப்பட்டுள்ளது.</u>

a. வட்டாட்சியர்கள் வேலைவாய்ப்பகம் மற்றும் செய்தி விளம்பரம் மூலமாக விண்ணப்பங்கள் பெறுவதை உறுதி செய்தல் வேண்டும்.
b. அரசாணை (நிலை) எண்.574, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை நாள்.17.10.2020–இல் உள்ள வழிகாட்டுதல்கள் பின்பற்றுள்ளனவா என்பதை உறுதி செய்ய வேண்டும்.
c. இன சுழற்சி முறையாக பின்பற்றப்பட வேண்டும்.
d. அதிகபட்ச கல்வி தகுதி பெற்ற காரணத்தினால் மனுக்கள் நிராகரிக்கப்படவில்லை என்பதை உறுதி செய்தல் வேண்டும்.
e. மனுதாரர் காலி பணியிடம் நிரப்பப்படும் கிராமத்தைச் சார்ந்தவர் போன்ற முக்கியமான விதிமுறைகள் மற்றும் இதர வழிகாட்டுதல்கள் பின்பற்றப்பட்டுள்ளது உறுதி செய்ய வேண்டும்.

9) கிராம உதவியாளர் பணி நியமனம் செய்யும் போது பின்பற்றிப்பட வேண்டிய வழிமுறைகள் குறித்து பார்வை–6ல் காணும் அரசாணையில் கீழ்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

| **Sl. No** | **Criteria for Selection** | **Marks to be awarded** | **Aggregate** |
|---|---|---|---|
| 1. | <u>**Educational Qualification (As on 1st July of the year of Recruitment)**</u><br>a) A pass upto 9 th Std<br>b) A pass upto Higher HSC/Diploma/ITI<br>c)For other Higher Qualifications | <br>5<br>7<br>10 | 10 |
| 2. | <u>**Riding / Driving Skill (As on 1st July of the year of Recruitment )**</u> | | |

| | | | |
|---|---|---|---|
| | a.) Able to ride bicycle.<br>b.) Holding Two Wheeler License (Live)<br>c.) Holding Four Wheeler License (Live) | 5<br>7<br>10 | 10 |
| 3 | **Reading and Writing Skill**<br>a) Test for Reading skill (Both Tamil and English)<br>b) Test for writing skill (Both Tamil and English) | 10<br>30 | 40 |
| 4. | **Nativity**<br>(to be confirmed with birth certificate and present address proof):<br>a) Born in the village for which recruitment is made.<br>b) Born within the Taluk limits (Taluk) jurisdiction shall be taked as on date) | 25<br>20 | 25 |
| | **Sub Total** | | 85 |
| 5. | **Interview:**<br>Interview shall be conducted by a committee consisting of the following three officials:<br>a) Taluk Tahsildar.<br>b) Any other Special Tahsildar of the Taluk, viz, Special Tahsildar(SSS) – Settlement / LA/etc or in their absence, any other Official nominated by Tahsildar.<br>c) Any Deputy Tahsildar of the Taluk (Each official Shall award a maximum of 15 marks to the candidates and the average to the three shall be awarded to the candidate as final marks of interview. | 15 | 15 |
| | **Grand Total** | | 100 |

**(If more than one candidates have scored equal marks for one vacancy, then the senior candidate by age must be selected)**

11) பார்வை-8ல் காணும் வருவாய் நிருவாக ஆணையரக கடிதத்தில் மாவட்ட ஆட்சியர்கள் வட்டாட்சியர்களால் மேற்கொள்ளப்படவுள்ள கிராம உதவியாளர் பணி நியமனம் குறித்து கீழ்கண்ட ஆய்வுகளை மேற்கொள்ளப்பட வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே கண்காணிப்பு அலுவலர்களாக நியமனம் செய்யப்பட்டுள்ள துணை ஆட்சியர்கள் கீழ்க்காணும் விதிகள் முறையாக பின்பற்றப்படுதல் தொடர்பாக ஆய்வுகளை மேற்கொள்ள வேண்டும்.

a. வட்டாட்சியர்களால் வேலைவாய்ப்பகம் மற்றும் செய்தி விளம்பரம் மூலம் விண்ணப்பங்கள் பெறப்பட்டுள்ளனவா என்றும்,
b. அரசாணை (நிலை) எண்.574, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை நாள்.17.10.2020–ல் உள்ள வழிகாட்டுதல்கள் பின்பற்றப்பட்டுள்ளதா என்பதையும்,
c. பார்வை–12ன் படி, இன சுழற்சிமுறை பின்பற்றப்படுகிறதா என்பதையும்,
d. அதிகபட்ச கல்வித் தகுதி பெற்ற காரணத்தால் மனு நிராகரிக்கப்படவில்லை என்பதையும்,
e. மனுதாரர் காலிப்பணியிடம் நிரப்பப்படும் கிராமத்தை சார்ந்தவர் போன்ற முக்கியமான விதிமுறைகள் மற்றும் இதர வழிகாட்டுதல்கள் பின்பற்றப்பட்டுள்ளனவா என உறுதி செய்யுமாறு கோரப்படுகின்றனர்.

12) கண்காணிப்பு அலுவலர்களாக நியமனம் செய்யப்பட்டுள்ள துணை ஆட்சியர்கள் மேற்கண்ட யாவும் சம்பந்தப்பட்ட வட்டாட்சியர்களால் முறையாக மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்பதை ஆய்வு செய்தும், மாவட்ட ஆட்சித்தலைவரிடம் இது தொடர்பான வழிகாட்டுதல்களை முறைப்படி பெற்று நடவடிக்கை தொடரவும் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

Signed by Wilson
Rajasekar R
Date: 09-10-2022 16:00:42
Reason: Approved

இணைப்பு:
அரசாணை (ம) அரசுக்கடிதங்கள்.

மாவட்ட ஆட்சியருக்காக,
திருப்பத்தூர் மாவட்டம்.

பெறுநர்

1. வருவாய் கோட்டாட்சியர்கள், திருப்பத்தூர்/வாணியம்பாடி.
2. தனித்துணை ஆட்சியர்கள்(ச.பா.தி.), திருப்பத்தூர்.
3. உதவி ஆணையர்(கலால்), திருப்பத்தூர்.
4. வட்டாட்சியர்கள், திருப்பத்தூர் மாவட்டம்.